ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2447/ 29 - 2025 ජූලි මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.07.31
2447/29 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடு களின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தில் ஜா - எல பிரதேச செயலாளர் பிரிவில் இல. 192 - துடல்ல மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஜா - எல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் மா அதிபதி சார்பாக கம்பஹா மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட முதற் சுவட்டு இல. கம்/ஜாஎ/2024/97 மற்றும் 2024.07.03 ஆந் திகதிய துண்டு 'ஏ' இல் விபரிக்கப்பட்ட சுமார் 0.0167 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டின் எல்லைகள்:

01. துண்டு 'A' - செக்குவத்தை - விஸ்தீரணம்: 0.0167 ஹெக்டயார்

வடக்கு: ஜா - எல பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள செக்குவத்தை மற்றும் வீதி (வீ.அ.அ.) ; கிழக்கு: வீதி (வீ.அ.அ.) ; தெற்கு : வீதி (வீ.அ.அ.) மற்றும் வீதி : மேற்கு: வீதி மற்றும் துண்டு பி.

கே. டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. : 4-3/3/2023/HW/262.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, யூன் 19.

EOG 07 - 0363


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*